# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8097164

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 8/2018 | Date: நாள் 25.09.2018

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: As Amended by The Prevention of — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் 18.09.2018 13.00 hrs
   Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல்
   Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.09.2018
   Time : நேரம் 1300 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - III
   Time : நேரம் 1300 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 65 கி.மீ. தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி தாலுக்கா அலுவலகம், விருத்தாசலம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P S இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.K. பூமாலை
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கலியபெருமாள்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 38
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்
   (g) Address : முகவரி நெ.5, கிழக்குத் தெரு, செம்பளகுறிச்சி, தே.கோபுராபுரம் அஞ்சல், விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   குற்றம் சாட்டப்பட்டவர்கள் : 1. ஸ்ரீதரன், வட்டாட்சியர், விருத்தாசலம் தாலுக்கா,
   2. கந்தசாமி, வட்டாட்சியரின் ஜீப் ஒட்டுனர், விருத்தாசலம் தாலுக்கா,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   வாதியால் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 25.09.2018ம் தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு நான் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது அலுவலகம் ஆஜர் செய்த கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தாலுக்கா, செம்பளக்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த கலியபெருமாள் மகன் A.K.பூமாலை என்பவர் கொடுத்துக்கொண்ட எழுத்து மூலமான புகார் மனு பின்வருமாறு உள்ளது. **அனுப்புனர்** : A.K. பூமாலை, த/பெ. கலியபெருமாள், நெ.5, கிழக்குத் தெரு, செம்பளக்குறிச்சி, விருத்தாசலம் தாலுக்கா, கடலூர் மாவட்டம், கைபேசி - 6383917987. **பெறுநர்** : இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, கடலூர் மாவட்டம், கடலூர், அய்யா, நான் கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தாலுக்கா, செம்பலகுறிச்சி என்ற ஊரில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன்.

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு A.K. பூமாலை

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.09.2018
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.45 hrs

Name: பெயர் சு. திருவேங்கடம்
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ..........
ஊ.த.க. பிரிவு கடலூர்

எனக்கு சொந்தமாக இரண்டு ஏக்கர் விவசாய நிலம் உள்ளது, அதில் நான் விவசாயம் செய்துவருகிறேன். நான் விவசாய வேலை போக மத்தநாட்களில் பழைய கட்டிடங்கள் இடித்து அப்புறப்படுத்தும் வேலையும் செய்து வருகிறேன். கட்டிடங்கள் இடிக்கும்போது கிடைக்கும் ரப்பிஷ் மற்றும் கம்பி, பார உத்திரங்கள் போன்றவற்றை எடுத்து விற்பனை செய்வேன். இந்த வேலைக்கு டிப்பர் லாரி தேவைப்பட்டதால், நான் பெரம்பலூர் மாவட்டம், எலம்பலூர் கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகன் ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமான TN 46 F 4270 என்ற டிப்பர் லாரியை 26.06.2018 முதல் நாள் வாடகை ரூ.2000/-க்கு பேசி ரூ.1,00,000/- அட்வான்ஸ் அவரிடம் கொடுத்து மாத வாடகைக்கு டிப்பர் லாரியை இயக்கிவருகிறேன். இந்த வாகனத்தை கட்சிப்பாக்கத்தை சேர்ந்த சிவக்குமார் என்ற டிரைவர் ஓட்டிவருகிறார். நான் கடந்த மாதம் விருத்தாசலம் ஆலடி ரோட்டில் ஒரு பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் காண்ட்டிராக்ட் எடுத்திருந்தேன். அதன் கடக்காலை இடித்தபோது அதில் கொட்டப்பட்டிருந்த மண்ணை அள்ளி அப்புறப்படுத்தவேண்டியிருந்தது. அதனை எனது டிப்பர் லாரியில் ஏற்றிவிட்டேன். எனது லாரியின் டிரைவர் சிவக்குமார், என்னிடம் இந்த மண்ணை வீணா கொட்டவேண்டாம். நான் விவசாயம் செய்யும் நிலம் ரொம்ப பள்ளமாக இருக்கிறது. அதை சமன் படுத்துவதற்காக அவரது நிலத்தில் கொட்டிக்கொள்கிறேன் என என்னிடம் சொல்லி எடுத்துக்கொண்டு சென்றார். அவ்வாறு அவர் போகும் வழியில் 21.08.2018ம் தேதி மதியம் சுமார் 1.00 மணிக்கு தொரவலூர் ரோட்டருகில் விருத்தாசலம் தாசில்தார் மற்றும் அவர் ஜீப் ஓட்டுனர் ஆகிய இருவரும் லாரியை மறித்து சோதனை செய்துள்ளனர். பின்னர், டிரைவர் அவர்களிடம் கட்டிட கடக்கால் ரப்பிஷ் என எடுத்துச் சொல்லியும் கேட்காமல் திருட்டு மணல் கொண்டுசெல்வதாக கூறி கேஸ் போடுவதற்காக டிப்பர் லாரியை தாலுக்கா அலுவலகத்திற்கு எடுத்துக்கிட்டு போயிட்டாங்க. அங்கியே டிரைவர் சிவக்குமாரை அனுப்பிவிட்டார்கள். அதன்பிறகு நான் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை விருத்தாசலம் தாலுக்க அலுவலகம் போய் பார்த்தபோது, என்னுடைய லாரி அங்கேயே நின்றுகொண்டிருந்தது. தாசில்தாரையோ அவரது டிரைவரையே பார்க்க முடியல. தாசில்தார் பெயர் ஸ்ரீதரன் என்றும், அவரது டிரைவர் கந்தசாமி என

தெரியவந்தது. கடைசியாக நான் 18.09.2018ம் தேதி விருத்தாசலம் தாலுக்கா ஆபிஸ் சென்றிருந்தேன். அப்போது தாசில்தார் இருப்பதாக கேள்விப்பட்டு மதியம் சுமார் 1.00 மணிக்கு அவரது அறைக்கு சென்று அவரை பார்த்து எனது லாரியில் திருட்டு மணல் ஏற்றி வரவில்லை என்றும், நான் கடக்கால் கட்டிட மண்தான் ஏற்றி அனுப்பினேன் என்று சொன்னேன். அதுக்கு அவர் ஒத்துக்கவில்லை. உன் வண்டி திருட்டு மண் ஏற்றிவருவதாக கேஸ் போட்டாச்சி, விடலாம் முடியாது. RDO ஆபீஸ்ல அபராதம் ரூ.30,000/- கட்டிதான் உனது லாரியை விடமுடியும் என சொன்னார். லாரிய எடுத்துகிட்டு போக வேற வழிதெரியாத நான் தாசில்தாரிடம், நான்போய் RDOவிடம் அபராதத்தை கட்டிவிட்டு வந்துவிடுகிறேன். லாரியை கொடுங்க என்று சொன்னேன். அதற்கு அவர் சும்மா வெறுங்கைல மொழம் போட்டுவிட்டு போலான்னு பாக்கிறியா, எனக்கு தனியா 15,000/- ரூபாய் கொடுத்தாதான், நீ RDO கிட்ட அபராதம் கட்டுவதற்குண்டான பைல ரெடிபண்ணி அனுப்பிவைப்பேன் என சொன்னார். அங்கிருந்த அவரது ஜீப் டிரைவர் கந்தசாமி அய்யா சொல்றமாதிரி சீக்கிரம் காச கொடுத்துட்டு லாரிய சீக்கிரம் எடுக்குற வழியபாரு என சொன்னார். நான் பைல் ரெடிபண்ணி அனுப்பினாதான் நீ அங்க அபராதத்தை கட்டமுடியும். நீ எனக்கு காசு கொடுக்கலனா உன் லாரி இங்கியே நின்னு மக்கி போகவேண்டியதுதான், என சொன்னார். அவர்களிடம் நான் லாரி ஓனர்கிட்ட கலந்து பேசிட்டு வந்து விவரம் தெரிவிப்பதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான், லாரி மீது வழக்கு போட்ட விவரத்தினை லாரி ஓனர் ஆறுமுகத்திடம் சொன்னேன். தாசில்தார் பணம் கேட்ட விஷயத்தையும் அவர்கிட்ட சொன்னேன். எங்களுக்கு தாசில்தாருக்கு லஞ்சப்பணம் ரூ.15000/- கொடுத்து லாரியை எடுத்துகிட்டு போக விருப்பமில்லை. எனக்கு சொந்தமான நிலத்தில் நெற்பயிர் நடவு நடும் விவசாய வேலை இருந்ததால் வேலையை முடித்துக்கொண்டு இன்று வந்து புகார் செய்கிறேன். என்னிடம் தனக்காக பணம் கேட்ட விருத்தாசலம் தாசில்தார் ஸ்ரீதரன் மற்றும் அவரது ஜீப் டிரைவர் கந்தசாமி ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இப்படிக்கு, sd- A.K.பூமாலை, 25.9.18. அய்யா, மேற்கண்ட வாதியின் புகார் மனுவை இன்று 25.09.2018ம் தேதி மதியம் சுமார் 13.00 மணிக்கு பெற்று, புகாரில் கூறப்பட்ட குற்றம்

அ. [signature] 25/9/18

சம்மந்தமாக இரகசிய விசாரணை செய்ததில் பிடிக்கக்கூடிய குற்றத்திற்கான முகாந்திரம் இருப்பது தெரியவந்ததினாலும், குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களின் நடத்தை சம்மந்தமாக இரகசிய விசாரணை செய்ததிலிருந்தும், இப்புகாரின் மீது நடவடிக்கை எடுக்க இன்று 25.09.2018ம் தேதி மாலை சுமார் 16.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.8/2018, U/s 7 Prevention of Corruption Act 1988, as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018-ன் படி வழக்கு பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். மேலும், வழக்கின் பொறிவைப்பு நடவடிக்கைக்கு புகார்தாரரை 26.09.2018ம் தேதி காலை 07.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு வழக்கின் எதிரிகள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.15,000/-த்துடன் ஆஜராக அறிவுறுத்தினேன். வழக்கின் புகார்தாரர் சொன்னபடி பணத்துடன் ஆஜராவதாக உறுதியளித்தார். இதன் அசலை வாதியின் புகாருடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

அ.[signature]
25/9/18